அவசரம் /தேர்வுகள் உடனடி கவனம்

**அனுப்புநர்**

திருமதி.செ.அமுதவல்லி,
M.Sc.,B.Ed.,M.Lis.,DEPA.,
இணை இயக்குநர் (பணியாளர்),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி),
புதுச்சேரி.

**ந.க.எண்.246301/ பி1 /2018** **நாள். 07.05.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு – பள்ளி மாணாக்கர் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ள கடைசி வாய்ப்பு – அறிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை :** இவ்வலுவலகக் இதே எண்ணிட்ட கடிதங்கள் நாள்.21.01.2019, 24.01.2019, 06.02.2019, 19.02.2019 மற்றும் 27.03.2019.

-----

மார்ச் 2019, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான பெயர்ப் பட்டியலில் பள்ளிகள் நேரடியாக ஆன்–லைனிலும் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் வாயிலாகவும் திருத்தங்களை மேற்கொள்ள, அரசுத் தேர்வுத் துறையால் பள்ளிகளுக்கு பலமுறை வாய்ப்பளிக்கப்பட்டது. பெயர்ப்பட்டியல் தயாரிக்க போதுமான கால அவகாசமும், திருத்தங்கள் மேற்கொள்ள பல வாய்ப்புகளும் அளிக்கப்பட்ட நிலையிலும் கூட, சில பள்ளிகளின் பெயர்ப்பட்டியல்களில் பிழைத் திருத்தம் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என்பதற்கு, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவு வெளியிட்ட பின்னரும் சில பள்ளிகளிலிருந்து பெயர்ப் பட்டியலில் திருத்தங்களை கோரி இவ்வலுவலகத்தில் பெறப்படும் கடிதங்கள் வாயிலாக தெரிய வருகிறது.

எனவே, அனைத்து பள்ளிகளுக்கும், மார்ச் 2019, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான பெயர்ப் பட்டியலில் **தேர்வர்களது தலைப்பெழுத்து, பெயர், (ஆங்கிலம் / தமிழ்) பிறந்த தேதி, பயிற்று மொழி (medium), புகைப்படம், பள்ளியின் பெயர்** ஆகியவற்றில் மட்டும் திருத்தங்கள் மேற்கொள்ள இறுதியாக ஒரு வாய்ப்பு பள்ளிகளுக்கு தற்போது வழங்கப்படுகிறது.

..2..

ஒவ்வொரு ஆண்டும் இதேபோன்று பலமுறை மாணாக்கரது பெயர்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ள வாய்ப்பளித்தும், தேர்வர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர் திருத்தம் கோரி கடிதம் பெறப்படுவது ஒரு தொடர் நிகழ்வாக உள்ளது. இது தேர்வர்களுக்கும், தேர்வுத்துறைக்கும் பல சிக்கல்களை உருவாக்குகிறது. எனவே, மாவட்டக் கல்வி அலுவலர்கள் இதன் முக்கியத்துவத்தை தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், மாணாக்கரின் பெயர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளக் கோரி, அரசுத் தேர்வுகள் இயக்கககத்திற்கு கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி இருப்பினும், மீளவும் பள்ளித் தலைமையாசிரியர்கள் பெயர்ப் பட்டியல்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களின் விவரங்களை, தனித்தனியே பட்டியலிட்டு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரிடம் **09.05.2019 முற்பகலுக்குள்** ஒப்படைக்க வேண்டும்.

மாவட்டக் கல்வி அலுவலர்கள் **10.05.2019 பிற்பகல் முதல் 13.05.2019 வரை** ஆகிய நாட்களில் அரசுத் தேர்வுத் துறை இணையதளத்தில் தங்களுக்கான User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, தங்களது நிர்வாகத்திற்குட்பட்ட பள்ளிகளிலிருந்து பெறப்படுகின்ற மார்ச் 2019, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான பெயர்ப் பட்டியலில் திருத்தங்களை பதிவேற்றம் செய்திட வேண்டும்.

தேர்வர்களது நலன் கருதி, பிழைகளற்ற மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கிட இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளாமல், மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்பட்ட பிறகு, சான்றிதழில் திருத்தம் செய்யக் கோரி இவ்வலுவலகத்தில் மனுக்கள் பெறப்படின், சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பள்ளிக் கல்வித்துறைக்கு பரிந்துரை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் தங்களது நிர்வாகத்திற்குட்பட்ட அனைத்து பள்ளிகளுக்கும், இப்பொருள் குறித்து விரைந்து சுற்றறிக்கை அனுப்புமாறும், **இப்பணிக்கு அதிமுக்கியத்துவம் அளித்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்** கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/–**

**இணை இயக்குநர் (பணியாளர்)**

**நகல்**

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
   – தகவலுக்காகவும் உரிய தொடர் நடவடிக்கைக்காகவும்